LORDS TODAY - International Social Media & Magazine

LORDS TODAY RNI Ref. No. 1287921 Title Code : TNBL04354 | May 2021
WhatsApp : 91-98405 59673 Editor | Publisher & Owner : Lords. M. PAULRAJ
Free for - LORDS | LIONS | ROTARY & All International Social Service CLUBS

LORDS CLUBS INTERNATIONAL

LORDS TODAY

BHAGAVAD GITA

BIBLE



KURAN

2021- 16796675755

www.lordsclubs.com

தலையங்கம்...

உலக மக்களின் மூன்று மதம் வேத நூல்கள்

தொடர் 4







BHAGAVAD GITA-Tamil	BIBLE Tamil	KURAN Tamil
6 Page's	6 Page's	6 Page's
தொடரும்.....	தொடரும்.....	தொடரும்.....

உலக ஊடக வரலாற்றில் முதல்முறையாக உலக மக்கள் நலன்கருதி உலகிலேயே முதல்முறையாக உலகத்தரம் வாய்ந்த 3 மதம் வேதநூல் மெகாத்தொடர் ஒவ்வொரு மாதமும் பகவத் கீதை ஆறு பக்கங்களும் பைபிள் ஆறு பக்கங்களும் குரான் ஆறு பக்கங்களும் ஆக மொத்தம் 18 பக்கங்கள் இனி மாதம் தோரும் தவறாமல் தமிழில் பிரசுரிக்கப்பட்டு வெளிவரும் என்று அனைத்து வாசகர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியுடனும் அன்புடனும் தெரிவித்துக் கொள்கின்றேன். நான் முற்றிலுமாகப் படித்து முடித்த இந்த 3மத வேதநூல்களையும் பொதுமக்கள் அனைவரும் பக்த்தியுடன் படித்து ஊழல் பாவங்கள் உட்பட அனைத்து பாவங்களும் செய்யாமல் நேர்மையுடனும் ஒற்றுமையுடனும் வாழ வேண்டும் என பொதுமக்கள் அனைவருக்கும் அன்புடன் வேண்டுகோள் வைக்கின்றேன். இனி நல்லதை படித்து நல்லதை படைத்து, இவ்வுலக மக்களுக்கு நல்லதையே செய்து பொதுமக்களின் அனவைருடைய பொருளாதாரத்தையும் உயர்திடுவோம். அன்புடன் உங்கள்,

லார்ட்ஸ் மபால்ராஜ்

LORDS TODAY
RNI Ref. No. : 1287921 Title Code : TNBL04354
International social media and magazine
Editor | Publisher | and Owner
LORDS CLUBS INTERNATIONAL
Govt. Reg. No. : 1359/2013
International social service clubs
International President | and Founder
Web : www.lordsclubs.com



यदि मामप्रतीकारमशस्त्रं शस्त्रपाणयः।
धार्तराष्ट्रा रणे हन्युस्तन्मे क्षेमतरं भवेत्॥४६॥

கையி லாயுத மில்லாமல், எதிர்க்காமல் நிற்கு
மென்னை இந்த திருதராஷ்ட்ரக் கூட்டத்தார்
சஸ்த்ரபாணிகளாய்ப் போரில் மடித்து விடினும்
அது எனக்குப் பெரிய நன்மையேயாம். 46

सञ्जय उवाच—

एवमुक्त्वाऽर्जुनः सङ्ख्ये
रथोपस्थ उपाविशत्।
विसृज्य सशरं चापं
शोकसंविग्नमानसः॥४७॥

ஸஞ்ஜயன் சொல்லுகிறான்—

செருக் களத்தில் இவ்வாறு சொல்லிவிட்டுப்
பார்த்தன் அம்புகளையும் வில்லையும் எறிந்து
போட்டுத் துயரில் மூழ்கிய மனத்தனாய்த்
தேர்ப் பீடத்தின் மேலுட்கார்ந்து கொண்
டான். 47



इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु
ब्रह्मविद्यायां योगशास्त्रे
श्रीकृष्णार्जुनसंवादेऽर्जुनविषादयोगो नाम
प्रथमोऽध्यायः ।

இங்ஙனம் உபநிஷத்தும் பிரம வித்தையும் யோக
நூலும் ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுன ஸம்பாஷணையு
மாகிய ஸ்ரீமத் பகவத் கீதையில்
"அர்ஜுனன் துயரம்" என்ற
முதலத்யாயம்.



द्वितीयोऽध्यायः

இரண்டாம் அத்யாயம்.

ஸாங்க்யயோகம்.

सञ्जय उवाच—

तं तथा कृपयाऽऽविष्ट-
मश्रुपूर्णाकुलेक्षणम् ।
विषीदन्तमिदं वाक्य-
मुवाच मधुसूदनः ॥ १ ॥

ஸஞ்ஜயன் சொல்லுகிறான்—

அவ்வண்ணம் இரக்கம் மிஞ்சியவனாய் நீர் ததும்பிய சோக விழிகளுடன் வருந்திய அர்ஜுனனை நோக்கி மதுஸூதனன் சொல்லு 1.
கிறான்—



श्रीभगवानुवाच—

कुतस्त्वा कश्मलमिदं
विषमे समुपस्थितम् ।
अनार्यजुष्टमस्वर्ग्य-
मकीर्तिकरमर्जुन ॥ २ ॥

ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்—

இந்த முட்டுதலில் இவ்வுள்ளச் சோர்வை நீ எங்கிருந்து பெற்றாய்? இஃது ஆர்யருக்குத் தகாது. வானுலகைத் தடுப்பது; அபகீர்த்தி தருவது—அர்ஜுனா! 2

क्लैब्यं मा स्म गमः पार्थ
नैतत्त्वय्युपपद्यते ।
क्षुद्रं हृदयदौर्बल्यं
त्यक्त्वोत्तिष्ठ परन्तप ॥ ३ ॥

பார்த்தா, பேடித்தன்மை யடையாதே! இது நினக்குப் பொருந்தாது. இழிபட்ட மனத் தளர்ச்சியை நீக்கி எழுந்து நில்; பகைவரைச் சுடுவோனே! 3



अर्जुन उवाच—

कथं भीष्ममहं सङ्ख्ये द्रोणं च मधुसूदन ।
इषुभिः प्रतियोत्स्यामि पूजार्हावरिसूदन ॥ ४ ॥

அர்ஜுனன் சொல்லுகிறான்—

மதுஸூதனா, பீஷ்மனையும் துரோணனையும் போரில் அம்புகளால் எப்படி எதிர்ப்பேன்? இவர்கள் தொழுதற் குரியர்; பகைவரை யழிப்போய்! 4

गुरूनहत्वा हि महानुभावान्
श्रेयो भोक्तुं भैक्ष्यमपीह लोके ।
हत्वाऽर्थकामांस्तु गुरूनिहैव
भुञ्जीय भोगान्रुधिरप्रदिग्धान् ॥ ५ ॥

பெரியோராகிய குருக்களைக் கொல்லாமல், உலகத்தில் பிச்சை யெடுத்துண்பதும் நன்று. பொருளை விரும்பும் குருக்களைக் கொன்று நாம் துய்க்கும் இன்பங்கள் உதிரத்திற் (ரத்தத்தில்) கலந்தனவாம். 5



न चैतद्विद्मः कतरन्नो गरीयो
यद्वा जयेम यदि वा नो जयेयुः ।
यानेव हत्वा न जिजीविषाम-
स्तेऽवस्थिताः प्रमुखे धार्तराष्ट्राः ॥ ६ ॥

மேலும், நாம் இவர்களை வெல்லுதல், இவர்கள் நம்மை வெல்லுதல்—இவற்றுள் எது நமக்கு மேன்மை யென்பது விளங்கவில்லை. எவரைக் கொன்றபின் நாம் உயிர் கொண்டு வாழ விரும்போமோ, அத்தகைய திருதராஷ்ட்ரக் கூட்டத்தார் போர் முனையில் வந்து நிற்கிறார்கள். 6

कार्पण्यदोषोपहतस्वभावः
पृच्छामि त्वां धर्मसम्मूढचेताः ।
यच्छ्रेयः स्यान्निश्चितं ब्रूहि तन्मे
शिष्यस्तेऽहं शाधि मां त्वां प्रपन्नम् ॥ ७ ॥

தொடரும்.....

BIBLE

மெகா தொடர்

தொடக்கநூல் அதிகாரம் – 8 – திருவிவிலியம்



தொடக்கநூல் அதிகாரம் –

8 – திருவிவிலியம் தொடக்கநூல் அதிகாரங்கள்

வெள்ளப்பெருக்கின் முடிவு

1 **கடவுள் நோவாவையும் அவருடன் பேழைக்குள் இருந்த எல்லாக் காட்டு விலங்குகள், கால் நடைகள் அனைத்தையும் நினைவு கூர்ந்தார். ஆகவே, மண்ணுலகின் மீது காற்று வீசச் செய்தார்; வெள்ளம் தணியத் தொடங்கியது.**

2 **பேராழத்தின் ஊற்றுகளும், வானங்களின் மதகுகளும் மூடப்பட்டன; வானத்திலிருந்து மழை பெய்வது நின்றது.**

3 **மண்ணுலகில் வெள்ளம் வற்றிக் குறைந்துகொண்டே வந்து, நூற்றைம்பதாம் நாள் முடிவில் வெள்ளம் வடிந்தது.**

4 **ஏழாம் மாதத்தில் பதினேழாம் நாளன்று அரராத்து மலைத்தொடர்மேல் பேழை தங்கியது.**

5 **பத்தாம் மாதம் வரை வெள்ளம் குறைந்து கொண்டே வந்தது. பத்தாம் மாதத்தின் முதல் நாளில் மலை உச்சிகள் தெரிந்தன. நாற்பது நாள்கள் முடிந்தபின் பேழையில் தாம் அமைத்திருந்த சாளரத்தை நோவா திறந்து,**

7 **காகம் ஒன்றை வெளியே அனுப்பினார். அது மண்ணுலகில் வெள்ளம் வற்றும் வரை போவதும் வருவதுமாக இருந்தது.**

8 **பின்னர், நிலப்பரப்பிலிருந்து வெள்ளம் வடிந்துவிட்டதா என்று பார்க்கப் புறா ஒன்றைத் தம்மிடமிருந்து வெளியே அனுப்பினார்.**

9 **ஆனால், அதற்கு கால் வைத்து தங்குவதற்கு இடம் தென்படாததால், அது அவரிடமே பேழைக்குத் திரும்பி வந்தது. ஏனெனில், நிலப்பரப்பு முழுவதிலும் இன்னும் வெள்ளம் நின்றது. ஆகவே, அவர் தம் கையை நீட்டி அதைப் பிடித்துத் தம்மிடம் பேழைக்குள் சேர்த்துக் கொண்டார்.**

BIBLE



10 அவர் இன்னும் ஏழு நாள்கள் காத்திருந்து மீண்டும் புறாவைப்
பேழையிலிருந்து வெளியே அனுப்பினார்.

11 மாலையில் அது அவரிடம் திரும்பி வந்தபொழுது, அதன் அலகில் அது
கொத்திக்கொண்டு வந்த ஒலிவ இலை இருந்தது. அப்பொழுது
நோவா மண்ணுலகில் வெள்ளம் வற்றிவிட்டது என்று
தெரிந்துகொண்டார்.

12 இன்னும் ஏழு நாள்கள் காத்திருந்தபின், புறாவை வெளியே
அனுப்பினார். அது அவரிடம் மறுபடி திரும்பி வரவில்லை.

13 அவருக்கு அறுநூற்றொன்று வயதான ஆண்டின் முதல் மாதத்தின்
முதல் நாளில் மண்ணுலகப் பரப்பில் இருந்த வெள்ளம் வற்றியது.
அப்பொழுது நோவா பேழையின் மேற்கூரையைத் திறந்து பார்த்தார்.
இதோ! நிலமெல்லாம் உலர்ந்திருந்தது.

14 இரண்டாம் மாதத்தின் இருபத்தேழாம் நாளில் மண்ணுலகில் நீர்
வற்றியிருந்தது.

15 அப்பொழுது கடவுள் நோவாவிடம் கூறியது:

16 நீயும் உன்னுடன் உன் மனைவியும் உன் புதல்வரும் உன் புதல்வரின்
மனைவியரும் பேழையிலிருந்து வெளியே வாருங்கள்.

17 உன்னுடன் உயிரோடு இருக்கும் பறவைகள், விலங்குகள், நிலத்தில்
ஊர்வன ஆகிய உயிரினங்கள் எல்லாவற்றையும் உன்னுடன்
வெளியே கொண்டு வா. மண்ணுலகில் அவை பன்மடங்காகட்டும்.
பூவுலகில் அவை பலுகிப் பெருகிப் பலன் தரட்டும்.

18 ஆகவே, நோவாவும் அவர் புதல்வரும் அவர் மனைவியும் அவர்
புதல்வரின் மனைவியரும் அவருடன் வெளியே வந்தனர்.

19 விலங்குகள், ஊர்வன, பறவைகள், மண்ணுலகில் நடமாடும்
அனைத்தும் வகை வகையாகப் பேழைகளிலிருந்து வெளியே
வந்தன. நோவா பலி செலுத்தல்

BIBLE



20 அப்பொழுது நோவா ஆண்டவருக்கு ஒரு பலிபீடம் கட்டி அதன்மேல் எல்லா வகைத் தக்க விலங்குகள், தக்க பறவைகளிலிருந்து எடுக்கப்பட்டவற்றை எரி பலியாகச் செலுத்தினார்.

21 ஆண்டவர் நறுமணத்தை நுகர்ந்து, தமக்குள் சொல்லிக் கொண்டது; மனிதரை முன்னிட்டு நிலத்தை இனி நான் சபிக்கவே மாட்டேன். ஏனெனில், மனிதரின் இதயச் சிந்தனை இளமையிலிருந்தே தீமையை உருவாக்குகின்றது. இப்பொழுது நான் செய்ததுபோல இனி எந்த உயிரையும் அழிக்கவே மாட்டேன்.

22 மண்ணுலகு இருக்கும் நாளளவும் விதைக்கும் காலமும் அறுவடைக் காலமும் குளிரும் வெப்பமும், கோடைக்காலமும் குளிர்க்காலமும் பகலும் இரவும் என்றும் ஓய்வதில்லை.

தொடக்கநூல் அதிகாரம் – 9 – திருவிவிலியம்

தொடக்கநூல் அதிகாரங்கள்

நோவாவுடன் கடவுளின் உடன்படிக்கை

1 கடவுள் நோவாவிற்கும் அவர் புதல்வருக்கும் ஆசி வழங்கிக் கூறியது: பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்.

2 மண்ணுலகின் விலங்குகள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்வன, கடலின் மீன்கள் அனைத்தும் உங்களுக்கு அஞ்சி நடுங்கட்டும்! அவை உங்கள் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

3 நடமாடி உயிர்வாழும் அனைத்தும் உங்களுக்கு உணவாகட்டும். உங்களுக்குப் பசுமையான செடிகளை உணவாகத் தந்தது போல இவை எல்லாவற்றையும் தருகிறேன்.

4 இறைச்சியை அதன் உயிராகிய இரத்தத்தோடு உண்ணாதீர்கள்.

5 உங்கள் உயிராகிய இரத்தத்திற்கு நான் ஈடு கேட்பேன். உயிரினம் ஒவ்வொன்றிடமும் மனிதர் ஒவ்வொருவரிடமும் நான் ஈடு கேட்பேன். மனிதரின் உயிருக்காக அவரவர் சகோதரரிடம் உயிரை நான் ஈடாகக் கேட்பேன்.

BIBLE



6 ஒரு மனிதரின் இரத்தத்தை எவர் சிந்துகிறாரோ அவரது இரத்தம்
வேறொரு மனிதரால் சிந்தப்படும். ஏனெனில், கடவுள் மனிதரைத் தம்
உருவில் உண்டாக்கினார்.

7 நீங்கள் பலுகிப் பெருகிப் பன்மடங்காகி மண்ணுலகை நிரப்புங்கள்.

8 கடவுள் நோவாவிடமும் அவருடனிருந்த அவர் புதல்வரிடமும்
கூறியது:

9 இதோ! நான் உங்களோடும் உங்களுக்குப் பின்வரும் உங்கள்
வழிமரபினரோடும்.

10 பேழையிலிருந்து வெளிவந்து உங்களோடிருக்கும் உயிரினங்கள்,
பறவைகள்,கால்நடைகள், நிலத்தில் உங்களுடன் உயிர்வாழும்
விலங்கினங்கள் எல்லாவற்றோடும், மண்ணுலகில் உள்ள எல்லா
உயிர்களோடும் என் உடன்படிக்கையை நிலைநாட்டுகிறேன்.

11 உங்களோடு என் உடன்படிக்கையை நிறுவுகிறேன்; சதையுள்ள எந்த
உயிரும் வெள்ளப் பெருக்கால் மீண்டும் அழிக்கப்படாது.
மண்ணுலகை அழிக்க இனி வெள்ளப் பெருக்கு வரவே வராது.

12 அப்பொழுது கடவுள், எனக்கும் உங்களுக்கும் உங்களுடன்
இருக்கும் உயிருள்ள எல்லாவற்றிற்குமிடையே தலைமுறைதோறும்
என்றென்றும் இருக்கும்படி, நான் ஏற்படுத்திய உடன்படிக்கையின்
அடையாளமாக.

13 என் வில்லை மேகத்தின்மேல் வைக்கிறேன். எனக்கும்
மண்ணுலகுக்கும் இடையே உடன்படிக்கையின் அடையாளமாக இது
இருக்கட்டும்.

14 மண்ணுலகின் மேல் நான் மேகத்தை வருவிக்க, அதன்மேல் வில்
தோன்றும்பொழுது,

BIBLE



15 எனக்கும் உங்களுக்கும் சதையுள்ள உயிரினங்கள்
எல்லாவற்றுக்கும் இடையே உள்ள என் உடன்படிக்கையை நான்
நினைவுகூர்வேன். உயிர்கள் எல்லாவற்றையும் அழிப்பதற்குத்
தண்ணீர் இனி ஒருபோதும் பெருவெள்ளமாக மாறாது.

16 வில் மேகத்தின்மேல் தோன்றும்பொழுது அதை நான் கண்டு,
கடவுளாகிய எனக்கும் மண்ணுலகில் இருக்கும் சதையுள்ள
உயிரினங்கள் அனைத்திற்கும் இடையே என்றென்றுமுள்ள
உடன்படிக்கையை நினைவுகூர்வேன் என்றார்.

17 கடவுள் நோவாவிடம், எனக்கும் மண்ணுலகில் வாழும் எல்லா
உயிரினங்களுக்கும் இடையே நான் ஏற்படுத்திய உடன்படிக்கையின்
அடையாளம் இதுவே என்றார். நோவாவும் அவர் புதல்வரும்

18 சேம், காம், எப்பேத்து, ஆகியோர் பேழையிலிருந்து வெளிவந்த
நோவாவின் புதல்வர். காம் கானானின் தந்தை. 19 இவர்கள்
மூவரும் நோவாவின் புதல்வர். இவர்களிலிருந்துதான் மண்ணுலகு
முழுவதும் மனித இனம் பரவியது.

20 நோவா நிலத்தில் பயிரிடுபவராகித் திராட்சைத் தோட்டம் அமைத்தார்.

21 அவர் திராட்சை இரசத்தைக் குடித்துப் போதைக்குள்ளாகித் தம்
கூடாரத்தில் ஆடை விலகிக் கிடந்தார்.

22 கானானின் தந்தையாகிய காம் தன் தந்தை திறந்த மேனியாராய்க்
கிடப்பதைக் கண்டு, வெளியே இருந்த தன் இரு சகோதரரிடம்
அதைத் தெரிவித்தான்.

23 அப்பொழுது சேமும், எப்பேத்தும் ஒரு துணியை எடுத்துத் தங்கள்
இருவரின் தோள்மேல் போட்டுக்கொண்டு பின்னோக்கி நடந்து
தங்கள் தந்தையின் திறந்த மேனியை மூடினர். அவர்கள் முகம்

BIBLE



எதிர்ப்பக்கம் நோக்கி இருந்ததால் தங்கள் தந்தையின் திறந்த
மேனியை அவர்கள் பார்க்கவில்லை.

24 நோவாவிற்குப் போதை தெளிந்ததும், தம் இளைய மகன் தமக்குச்
செய்ததை அறிந்தார்.

25 அப்பொழுது அவர், கானான் சபிக்கப்பட்டவன்; தன் சகோதரருக்கு
அவன் அடிமையிலும் அடிமையாக இருப்பான்.

26 சேமின் கடவுளாகிய ஆண்டவர் போற்றி! அவனுக்குக் கானான்
அடிமையாக இருப்பான்.

27 கடவுள் எப்பேத்து குடும்பத்தைப் பெருகச் செய்யட்டும். அவன்
சேமின் கூடாரத்தில் வாழட்டும். அவனுக்கும் கானான் அடிமையாக
இருக்கட்டும் என்றார்.

28 வெள்ளப்பெருக்குக்குப் பின்னர், நோவா முந்நூற்றைம்பது
ஆண்டுகள் வாழ்ந்தார். 29இவ்வாறு, நோவா தொள்ளாயிரத்து
ஐம்பது ஆண்டுகள் வாழ்ந்தபின் இறந்தார்.

தொடரும்.....

KURAN



மெகா தொடர்

கூறுகிறான்" எனக் கூறினார். "இப்பொழுதுதான் நீர் சரியான விபரத்தைக் கொண்டு வந்தீர்" என்று சொல்லி அவர்கள் செய்ய இயலாத நிலையில் அப்பசு மாட்டை அறுத்தார்கள்.

2:72 وَإِذْ قَتَلْتُمْ نَفْسًا فَادَّارَأْتُمْ فِيهَا ۖ وَاللَّهُ مُخْرِجٌ مَا كُنْتُمْ تَكْتُمُونَ

2:72. "நீங்கள் ஒரு மனிதனை கொன்றீர்கள்; பின் அதுபற்றி (ஒருவருக்கொருவர் குற்றம் சாட்டித்) தர்க்கித்துக் கொண்டிருந்தீர்கள்; ஆனால் அல்லாஹ் நீங்கள் மறைத்ததை வெளியாக்குபவனாக இருந்தான் (என்பதை நினைவு கூறுங்கள்).

2:73 فَقُلْنَا اضْرِبُوهُ بِبَعْضِهَا ۚ كَذَٰلِكَ يُحْيِي اللَّهُ الْمَوْتَىٰ وَيُرِيكُمْ آيَاتِهِ لَعَلَّكُمْ تَعْقِلُونَ

2:73. "(அறுக்கப்பட்ட அப்பசுவின்) ஒரு துண்டால் அ(க்கொலையுண்டவனின் சடலத்)தில் அடியுங்கள்" என்று நாம் சொன்னோம். இவ்வாறே அல்லாஹ் இறந்தவர்களை உயிர்ப்பிக்கிறான்; நீங்கள் (நல்ல) அறிவு பெறும் பொருட்டுத் தன் அத்தாட்சிகளையும் அவன்(இவ்வாறு) உங்களுக்குக் காட்டுகிறான்.

2:74 ثُمَّ قَسَتْ قُلُوبُكُمْ مِنْ بَعْدِ ذَٰلِكَ فَهِيَ كَالْحِجَارَةِ أَوْ أَشَدُّ قَسْوَةً ۚ وَإِنَّ مِنَ الْحِجَارَةِ لَمَا يَتَفَجَّرُ مِنْهُ الْأَنْهَارُ ۚ وَإِنَّ مِنْهَا لَمَا يَشَّقَّقُ فَيَخْرُجُ مِنْهُ الْمَاءُ ۚ وَإِنَّ مِنْهَا لَمَا يَهْبِطُ مِنْ خَشْيَةِ اللَّهِ ۗ وَمَا اللَّهُ بِغَافِلٍ عَمَّا تَعْمَلُونَ

2:74. இதன் பின்னரும் உங்கள் இதயங்கள் இறுகி விட்டன; அவை கற்பாறையைப்போல் ஆயின; அல்லது, (அதை விடவும்)அதிகக் கடினமாயின; (ஏனெனில்) திடமாகக் கற்பாறைகள் சிலவற்றினின்று ஆறுகள் ஒலித்தோடுவதுண்டு; இன்னும், சில பிளவுபட்டுத் திடமாக அவற்றினின்று தண்ணீர் வெளிப்படக் கூடியதுமுண்டு; இன்னும், திடமாக



அல்லாஹ்வின் மீதுள்ள அச்சத்தால் சில(கற்பாறைகள்) உருண்டு விழக்கூடியவையும் உண்டு; மேலும், அல்லாஹ் நீங்கள் செய்து வருவது பற்றி கவனிக்காமல் இல்லை.

2:75 من بعد ما أفتطمعون أن يؤمنوا لكم وقد كان فريق منهم يسمعون كلام الله ثم يحرفونه
عقلوه وهم يعلمون

2:75. (முஸ்லிம்களே!) இவர்கள் (யூதர்கள்) உங்களுக்காக நம்பிக்கை கொள்வார்கள் என்று ஆசை வைக்கின்றீர்களா? இவர்களில் ஒருசாரார் இறைவாக்கைக் கேட்டு; அதை விளங்கிக் கொண்ட பின்னர், தெரிந்து கொண்டே அதை மாற்றி விட்டார்கள்.

2:76 ةة وإذا خلا بعضهم إلى بعض قالوا أتحدثونهم بما وإذا لقوا الذين آمنوا قالوا آمنا
أفلا تعقلون فتح الله عليكم ليحاجوكم به عند ربكم

2:76. மேலும் அவர்கள் ஈமான் கொண்டவர்களை சந்திக்கும்போது, “நாங்களும் ஈமான் கொண்டிருக்கிறோம்” என்று சொல்கிறார்கள் ஆனால் அவர்களுள் சிலர் (அவர்களுள்) சிலருடன் தனித்திடும்போது, “உங்கள் இறைவன் முன் உங்களுக்கு எதிராக அவர்கள் வாதாடுவதற்காக அல்லாஹ் உங்களுக்கு அறிவித்துத் தந்த (தவ்ராத்)தை அவர்களுக்கு எடுத்துச் சொல்கிறீர்களா, (இதை) நீங்கள் உணரமாட்டீர்களா? என்று(யூதர்கள் சிலர்) கூறுகின்றனர்.

2:77 أولا يعلمون أن الله يعلم ما يسرون وما يعلنون



2:77. அவர்கள் மறைத்து வைப்பதையும், அவர்கள் வெளிப்படுத்துவதையும் நிச்சயமாக அல்லாஹ் நன்கறிவான் என்பதை அவர்கள் அறிய மாட்டார்களா?

2:78 وَمِنْهُمْ أُمِّيُّونَ لَا يَعْلَمُونَ الْكِتَابَ إِلَّا أَمَانِيَّ وَإِنْ هُمْ إِلَّا يَظُنُّونَ

2:78. மேலும் அவர்களில் எழுத்தறிவில்லாதோரும் இருக்கின்றனர்; கட்டுக் கதைகளை(அறிந்து வைத்திருக்கிறார்களே) தவிர வேதத்தை அறிந்து வைத்திருக்கவில்லை. மேலும் அவர்கள் (ஆதாரமற்ற) கற்பனை செய்வோர்களாக அன்றி வேறில்லை.

2:79 فَوَيْلٌ لِلَّذِينَ يَكْتُبُونَ الْكِتَابَ بِأَيْدِيهِمْ ثُمَّ يَقُولُونَ هَٰذَا مِنْ عِنْدِ اللَّهِ لِيَشْتَرُوا بِهِ ثَمَنًا قَلِيلًا ۖ
فَوَيْلٌ لَهُمْ مِمَّا كَتَبَتْ أَيْدِيهِمْ وَوَيْلٌ لَهُمْ مِمَّا يَكْسِبُونَ

2:79. அற்பக் கிரயத்தைப் பெறுவதற்காகத் தம் கரங்களாலே நூலை எழுதிவைத்துக் கொண்டு பின்னர் அது அல்லாஹ்விடமிருந்து வந்தது என்று கூறுகிறார்களே, அவர்களுக்கு கேடுதான்! அவர்களுடைய கைகள் இவ்வாறு எழுதியதற்காகவும் அவர்களுக்குக் கேடுதான்; அதிலிருந்து அவர்கள் ஈட்டும் சம்பாத்தியத்திற்காகவும் அவர்களுக்குக் கேடுதான்!

2:80 وَقَالُوا لَنْ تَمَسَّنَا النَّارُ إِلَّا أَيَّامًا مَعْدُودَةً ۚ قُلْ أَتَّخَذْتُمْ عِنْدَ اللَّهِ عَهْدًا فَلَنْ يُخْلِفَ اللَّهُ عَهْدَهُ ۖ
أَمْ تَقُولُونَ عَلَى اللَّهِ مَا لَا تَعْلَمُونَ

2:80. "ஒரு சில நாட்கள் தவிர எங்களை நரக நெருப்புத் தீண்டாது" என்று அவர்கள் கூறுகிறார்கள். "அல்லாஹ்விடமிருந்து அப்படி ஏதேனும் உறுதிமொழி பெற்றிருக்கிறீர்களா? அப்படியாயின் அல்லாஹ் தன் உறுதி மொழிக்கு மாற்றம் செய்யவே



மாட்டான்; அல்லது நீங்கள் அறியாததை அல்லாஹ்
சொன்னதாக இட்டுக் கட்டிக் கூறுகின்றீர்களா?" என்று
(நபியே! அந்த யூதர்களிடம்) நீர் கேளும்.

2:81 بَلَىٰ مَن كَسَبَ سَيِّئَةً وَأَحَاطَتْ بِهِ خَطِيٓـَٔتُهُۥ فَأُولَـٰٓئِكَ أَصْحَـٰبُ ٱلنَّارِ ۖ هُمْ فِيهَا خَـٰلِدُونَ

2:81. அப்படியல்ல! எவர் தீமையைச் சம்பாதித்து, அந்தக் குற்றம் அவரைச் சூழ்ந்து கொள்கிறதோ, அத்தகையோர் நரகவாசிகளே; அவர்கள் அ(ந் நரகத்)தில் என்றென்றும் இருப்பார்கள்.

2:82 وَٱلَّذِينَ ءَامَنُوا۟ وَعَمِلُوا۟ ٱلصَّـٰلِحَـٰتِ أُولَـٰٓئِكَ أَصْحَـٰبُ ٱلْجَنَّةِ ۖ هُمْ فِيهَا خَـٰلِدُونَ

2:82. எவர் நம்பிக்கை கொண்டு நற்கருமங்களைச் செய்கிறார்களோ, அவர்கள் சுவர்க்கவாசிகள்; அவர்கள் அங்கு என்றென்றும் இருப்பார்கள்.

2:83 وَإِذْ أَخَذْنَا مِيثَـٰقَ بَنِىٓ إِسْرَٰٓءِيلَ لَا تَعْبُدُونَ إِلَّا ٱللَّهَ وَبِٱلْوَٰلِدَيْنِ إِحْسَانًا وَذِى ٱلْقُرْبَىٰ وَٱلْيَتَـٰمَىٰ وَٱلْمَسَـٰكِينِ وَقُولُوا۟ لِلنَّاسِ حُسْنًا وَأَقِيمُوا۟ ٱلصَّلَوٰةَ وَءَاتُوا۟ ٱلزَّكَوٰةَ ثُمَّ تَوَلَّيْتُمْ إِلَّا قَلِيلًا مِّنكُمْ وَأَنتُم مُّعْرِضُونَ

2:83. இன்னும் (நினைவு கூறுங்கள்;) நாம் (யஃகூப் என்ற) இஸ்ராயீல் மக்களிடத்தில், "அல்லாஹ்வைத் தவிர வேறு எவரையும்-எதனையும் நீங்கள் வணங்கக்கூடாது;(உங்கள்) பெற்றோருக்கும், உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், மிஸ்கீன்(களான ஏழை)களுக்கும் நன்மை செய்யுங்கள்; மனிதர்களிடம் அழகானதைப் பேசுங்கள்; மேலும் தொழுகையை முறையாகக் கடைப்பிடித்து வாருங்கள்; ஜகாத்தையும் ஒழுங்காகக் கொடுத்து வாருங்கள்" என்று உறுதிமொழியை வாங்கினோம். ஆனால் உங்களில் சிலரைத் தவிர (மற்ற யாவரும் உறுதி மொழியைநிறைவேற்றாமல்,



அதிலிருந்து) புரண்டுவிட்டீர்கள், இன்னும் நீங்கள் புறக்கணித்தவர்களாகவே இருக்கின்றீர்கள்.

2:84 وَإِذْ أَخَذْنَا مِيثَاقَكُمْ لَا تَسْفِكُونَ دِمَاءَكُمْ وَلَا تُخْرِجُونَ أَنفُسَكُم مِّن دِيَارِكُمْ ثُمَّ أَقْرَرْتُمْ وَأَنتُمْ تَشْهَدُونَ

2:84. இன்னும் (நினைவு கூறுங்கள்:) "உங்களிடையே இரத்தங்களைச் சிந்தாதீர்கள்; உங்களில் ஒருவர் மற்றவரை தம் வீடுகளை விட்டும் வெளியேற்றாதீர்கள்" என்னும் உறுதிமொழியை வாங்கினோம். பின்னர் (அதை) ஒப்புக்கொண்டீர்கள் (அதற்கு) நீங்களே சாட்சியாகவும் இருந்தீர்கள்.

2:85 ثُمَّ أَنتُمْ هَٰؤُلَاءِ تَقْتُلُونَ أَنفُسَكُمْ وَتُخْرِجُونَ فَرِيقًا مِّنكُم مِّن دِيَارِهِمْ تَظَاهَرُونَ عَلَيْهِم بِالْإِثْمِ وَالْعُدْوَانِ وَإِن يَأْتُوكُمْ أُسَارَىٰ تُفَادُوهُمْ وَهُوَ مُحَرَّمٌ عَلَيْكُمْ إِخْرَاجُهُمْ أَفَتُؤْمِنُونَ بِبَعْضِ الْكِتَابِ وَتَكْفُرُونَ بِبَعْضٍ فَمَا جَزَاءُ مَن يَفْعَلُ ذَٰلِكَ مِنكُمْ إِلَّا خِزْيٌ فِي الْحَيَاةِ الدُّنْيَا وَيَوْمَ الْقِيَامَةِ يُرَدُّونَ إِلَىٰ أَشَدِّ الْعَذَابِ وَمَا اللَّهُ بِغَافِلٍ عَمَّا تَعْمَلُونَ

2:85. (இவ்வாறு உறுதிப்படுத்திய) நீங்களே உங்களிடையே கொலை செய்கின்றீர்கள்; உங்களிலேயே ஒருசாராரை அவர்களுடைய வீடுகளிலிருந்து வெளியேற்றுகிறீர்கள்; அவர்கள்மீது அக்கிரமம் புரியவும், பகைமை கொள்ளவும் (அவர்களின் விரோதிகளுக்கு) உதவி செய்கிறீர்கள். வெளியேற்றப்பட்டவர்கள் (இவ்விரோதிகளிடம் சிக்கி) கைதிகளாக உங்களிடம் வந்தால், (அப்பொழுது மட்டும் பழிப்புக்கு அஞ்சி) நஷ்டஈடு பெற்றுக்கொண்டு (அவர்களை விடுதலை செய்து) விடுகிறீர்கள்-ஆனால் அவர்களை (வீடுகளை விட்டு) வெளியேற்றுவது உங்கள் மீது ஹராமா(ன தடுக்கப்பட்ட செயலா)கும். (அப்படியென்றால்) நீங்கள் வேதத்தில் சிலதை நம்பி சிலதை மறுக்கிறீர்களா? எனவே உங்களில்

KURAN



இவ்வகையில் செயல்படுகிறவர்களுக்கு இவ்வுலக வாழ்வில் இழிவைத் தவிர வேறு கூலி எதுவும் கிடைக்காது. மறுமை(கியாம) நாளிலோ அவர்கள் மிகக் கடுமையான வேதனையின்பால் மீட்டப்படுவார்கள்; இன்னும் நீங்கள் செய்து வருவதை அல்லாஹ் கவனிக்காமல் இல்லை.

2:86 اُولٰٓٮِٕكَ الَّذِيْنَ اشْتَرَوُا الْحَيٰوةَ الدُّنْيَا بِالْاٰخِرَةِ فَلَا يُخَفَّفُ عَنْهُمُ الْعَذَابُ وَلَا هُمْ يُنْصَرُوْنَ

2:86. மறுமை(யின் நிலையான வாழ்க்கை)க்குப் பகரமாக, (அற்பமான) இவ்வுலக வாழ்க்கையை விலைக்கு வாங்கிக் கொண்டவர்கள் இவர்கள்தாம்; ஆகவே இவர்களுக்கு (ஒரு சிறிதளவும்) வேதனை இலேசாக்கப்பட மாட்டாது; இவர்கள் உதவியும் செய்யப்படமாட்டார்கள்.

2:87 وَلَقَدْ اٰتَيْنَا مُوْسَى الْكِتٰبَ وَقَفَّيْنَا مِنْ بَعْدِهٖ بِالرُّسُلِ وَاٰتَيْنَا عِيْسَى ابْنَ مَرْيَمَ الْبَيِّنٰتِ وَاَيَّدْنٰهُ بِرُوْحِ الْقُدُسِ اَفَكُلَّمَا جَآءَكُمْ رَسُوْلٌۢ بِمَا لَا تَهْوٰٓى اَنْفُسُكُمُ اسْتَكْبَرْتُمْ فَفَرِيْقًا كَذَّبْتُمْ وَفَرِيْقًا تَقْتُلُوْنَ

2:87. மேலும், நாம் மூஸாவுக்கு நிச்சயமாக வேதத்தைக் கொடுத்தோம். அவருக்குப்பின் தொடர்ச்சியாக (இறை) தூதர்களை அனுப்பினோம்; இன்னும், மர்யமின் குமாரர் ஈஸாவுக்குத் தெளிவான அத்தாட்சிகளைக் ரூஹுல் குதுஸி (என்னும் பரிசுத்த ஆத்மாவைக்) கொண்டு அவருக்கு வலுவூட்டினோம்; உங்கள் மனம் விரும்பாததை (நம்) தூதர் உங்களிடம் கொண்டு வரும்போதெல்லாம் நீங்கள் கர்வம் கொண்டு (புறக்கணித்து) வந்தீர்களல்லவா? சிலரை நீங்கள் பொய்ப்பித்தீர்கள்; சிலரை கொன்றீர்கள்.

2:88 بَلْ لَّعَنَهُمُ اللّٰهُ بِكُفْرِهِمْ فَقَلِيْلًا مَّا يُؤْمِنُوْنَ غُلْفٌ

தொடரும்.....

Lords மபால்ராஜ்
Lords A. SENTHIL KUMAR
Lords R. RAJ KUMAR
Lords P. DHAMODHARAN
Lords N. ARCHIT CHHAJER
Lords P. THIRU GNANAM
Lords J. BALA KUMARAN
Lords K. MANI KANDAN

POLICE

Lords M. DEEPA

Lords K. SUBRAMANI

Lords ASHOK KUMAR